மாவட்ட அவைத்தலைவர் அ. நடராஜன் தலைமையில்

பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், அக். 13 -

பெரம்பலூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம், இன்று (13.10.2026) நடை பெறுகிறது. இது குறித்து பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் வெளியிட் டுள்ள அறிக்கை வருமாறு,

பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம், இன்று (13.10.2026 - புதன் கிழமை) மாலை 3.30 மணி யளவில், பெரம்பலூர் பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத் தில் கழக துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்



றிய அமைச்சர் ஆ. இராசா எம்.பி., வழிகாட்டுதல்படி, மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமை யில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் தலை மைக் கழக பிரதிநிதிகள் மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் அஞ் சுகம்பூபதி,

மாநில அயலக அணி துணைச்செயலாளர் முத்து வேல்இராமசாமி ஆகி யோர் கலந்து கொள்கின்ற னர். அது சமயம், சட்ட மன்ற உறுப்பினர், நாடா ளுமன்ற உறுப்பினர்,

மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகி கள், தலைமைச் செயற் குழு,பொதுக்குழு உறுப்பி னர்கள்,

ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், மாவட்ட அணைத்து அணி களின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பா ளர்கள், முன்னாள், இந் நாள் உள்ளாட்சி பிரதிநிதி கள், கழக உடன்பிறப்பு கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ ஜெகதீசன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

தஞ்சை வடக்கு மாவட்டக் கழக மறு சீரமைப்புக் குழு ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை கா.அன்பழகன் அறிவிப்பு!

தஞ்சாவூர், அக்.13 -

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழக மறு சீரமைப்பு குழு ஆலோச னைக் கூட்டம் கும்ப கோணம், திருவிடை மரு தூர், பாபநாசம் ஆகிய மூன்று தொகுதிகளில் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப் பாளர் சாக்கோட்டை கா. அன்பழகன் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்ட அறி விப்பு வருமாறு: கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அமைக்கப் பட்ட கழக மறு சீரமைப்பு குழு சார்பில் மாநில இளை ஞர் அணி துணைச் செய லாளர் ஜி.பி.ராஜா, மாநில



மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் மாலதி நாராய ணசாமி ஆகியோர் தலை மையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

அதுசமயம் கூட்டத்தில் முன்னாள் இந்நாள் நாடா ளுமன்ற, சட்டமன்ற உறுப் பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர் கள், பொதுக்குழு உறுப்பி னர்கள், மாநில நிர்வாகி கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், மாந கர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் மாநகர வட்டக் கழக செய லாளர்கள் குறித்த நேரத் தில் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள் கிறேன்.

திருவிடைமருதூர் தொகுதிக்கு 15.10.2026 வியாழக்கிழமை, காலை 9:00 மணிக்கு, திருவிடை மருதூர் கலைஞர் பாசறை யிலும்.

கும்பகோணம் தொகுதிக்கு 15.10.2026 வியா ழக்கிழமை, காலை 10:00 மணிக்கு கும்ப கோணம் அண்ணா அரண் மனையிலும்,

பாபநாசம் தொகுதிக்கு 15.10.2026 வியாழக் கிழமை, காலை 11:00 மணிக்கு, பாபநாசம் கட்சி அலுவலகத்திலும், நடை பெறும்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக் கோட்டை க.அன்பழகன் அறிவிப்பு வெளியிட்டுள் ளார்.

டெல்லியிலிருந்து சென்னை வந்த

விமானத்தில் தீ பற்றி எரிந்ததால் பரபரப்பு!

சென்னை, அக்.13 –

டெல்லியில் இருந்து சென்னை வந்துகொண்டிருந்த இண்டிகோ பயணிகள் விமானத்தில் தீ விபத்து ஏற்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. 200க்கும் மேற்பட்ட பய ணிகளுடன் நடுவானில் வந்த போது விமானத்தில் தீப்பிடித்ததால் அவசர அவசரமாக அந்த விமானம் ஹைதராபாத் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

நடு வானில் பறந்துகொண்டி ருந்த போது விமானத்தில் கரும் புகை ஏற்பட்டு தீப்பிடித்ததால் உள்ளே இருந்த பயணிகள் பலரும் அச்சத்தில் அலறினர். இதைய டுத்து விமானி துரிதமாக செயல் பட்டு ஐதராபாத் சர்வதேச விமான நிலையத்தில் விமானத்தை பத்திர மாக தரையிறக்கினார்.

இதன் பிறகு விமானத்தில் இருந்த பயணிகளும் அவசர அவச ரமாக பத்திரமாக தரையிறங்கினர். இதன் பிறகே பயணிகள் நிம்மதி பெருமூச்சு விட்டுள்ளனர். விமானத் தில் இருக்கைக்கு மேல்பகுதியில் தீப்பிடித்து கரும்புகை வெளியேறு வது போன்றும், பயணிகள் அல றித் துடிப்பது போன்ற வீடியோக் களும் சமூக வலைத்தளத்தில் பரவி வருகின்றன.

டெல்லியில் இருந்து சென் னைக்கு இண்டிகோ விமானம் ஒன்று 200க்கு மேற்பட்ட பயணிக ளுடன் இன்று பிற்பகல் புறப்பட் டுள்ளது.

நடுவானில் விமான பறந்து கொண்டிருந்த போது தான் சிறிய அளவிலான தீ விபத்து ஏற்பட்டு இருக்கிறது. உடனடியாக விமானத் தில் பயணித்த ஊழியர்கள் தீயை அணைத்தனர். எனினும் பாது காப்பு காரணமாக உடனடியாக விமானமானது ஐதராபாத் விமான நிலையத்தில் பத்திரமாக தரையி றக்கப்பட்டது.



அமெரிக்காவைச் சேர்ந்த சியாட்டில் இந்தியா குழு (Seattle India Team, USA), தலைவர் தேவராஜன் முத்துக்குமாரசாமி ஏற்பாட்டில் "நம்ம ஊரு நம்ம பள்ளி" திட்டத்தின் கீழ் திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளி நூலகத்திற்கு ரூ.54,900 மதிப்பீட்டிலும், பெதப்பம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.49,250 மதிப்பீட்டிலும், உடுமலைப்பேட்டை இராமச்சந்திராபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.31,250 மதிப்பீட்டிலும் என 1,350 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.1,35,400 மதிப்பிலான கல்வி உபகரணங்களை உடுமலைப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார், திட்ட இயக்குநர், அண்ணாமலைப் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முனைவர் கு.ஜெயபிரகாஷ் ஆகியோர் சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் வழங்கினர்.

போராட்டத்தை தடுத்து நிறுத்தும் வகையில்

மருத்துவமனை பணியாளர்களை வீட்டுக்காவலில் வைத்துள்ள போலீசார்!

தீவிரவாதிகள் போல் நடத்தப்படுவதாக குற்றச்சாட்டு!

சென்னை, அக். 13 -

பணி நிரந்தரம் உள் ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத் தில் ஈடுபடுவதாக அறிவித் திருந்த மருத்துவமனை பணியாளர்களை போலீ சார் தடுத்து நிறுத்தி வீட்டுக்காவலில் வைத்துள் ளனர்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனைகளில் சுமார் 3 ஆயிரத்து 500 மருத்துவமனை பணியா ளர்கள் தற்காலிக அடிப்ப டையில் பணியாற்றி வரு கின்றனர்.

பணி நிரந்தரம் உள் ளிட்ட வாழ்வாதாரக் கோரிக்கைகளை நிறை வேற்றக் கோரி அவர்கள் தொடர் போராட்டங் களை நடத்தி வந்துள்ள னர்.

தங்களது கோரிக்கை களை வலியுறுத்தி சென்னை எழும்பூர் ராஜ ரத்தினம் மைதானம் அருகே உண்ணாவிரதப் போராட்டம் நடத்த உள் ளதாக அவர்கள் அறிவித்தி ருந்தனர்.

இந்நிலையில், சட்டம்ஒ ழுங்குப் பிரச்சினையைக் காரணம் காட்டி இப்போ ராட்டத்தைத் தடுக்கப் பல் வேறு பகுதிகளில் உள்ள மருத்துவமனை பணியா ளர்களை முன்னெச் சரிக்கை நடவடிக்கையாக நேற்று போலீசார் வீட்டுக் காவலில் தடுத்து வைத்துள் ளனர்.

காவல்துறையின் இந்த நடவடிக்கை சட்டவிரோ தமானது என்றும், அமைதி யான முறையில் போராடி வரும் தங்களை தீவிரவாதி கள் போல் போலீசார் நடத்துவதாகவும் மருத்து வமனை பணியாளர்கள் சங்க நிர்வாகிகள் குற்றம் சாட்டி உள்ளனர்.

நீதிமன்ற உத்தரவையும் மீறி

காவல்துறையில் தொடரும் ஆர்டர்லி முறை!

சென்னை, அக். 13 -

நீதிமன்ற உத்தரவையும் மீறி தமிழ்நாடு காவல்து றையில் ஆர்டர்லி முறை தொடர்வதாக தகவல் வெளியாகியுள்ளது.

காவல்துறையில் பணி யாற்றும் சில உயர் அதிகாரி கள் தங்கள் வீட்டு வேலைக்கு காவலர்களை பயன்படுத்தும் ஆர்டர்லி முறையால், காவல் நிலை யங்களில் காவலர் பற்றாக் குறை ஏற்பட்டு, ஒரு சில காவலர்கள் அதிகப்படி யான வேலை பளுவை மேற்கொள்கின்றனர்.

இதனை அடுத்து, ஆர் டர்லி முறை ஒழிக்கப்படு வதை தீவிரமாக கண்கா ணிக்க, மாவட்ட ஆட்சியர் தலைமையில், மாவட்ட அளவிலான கண்காணிப் புக் குழுக்களை அமைக்க சென்னை உயர் நீதிமன்றம் கடந்த மார்ச் மாதம் உத்தர விட்டிருந்தது.

இந்நிலையில், நீதிமன்ற உத்தரவையும் மீறி தற் போது காவல்துறையில் ஆர்டர்லி முறை தொடர்வ தாக தகவல் வெளியாகி யுள்ளது. கொடுங்கையூர் காவல் நிலையத்தில் பணி யாற்றும் சிறப்பு உதவி ஆய் வாளர் ஒருவர் பல ஆண்டு களாக, ஓய்வுபெற்ற டி. ஜி.பி.க்கு ஆர்டர்லியாக பணியாற்றி வருவதாக கூறப்படுகிறது.

கொடுங்கையூர் காவல் நிலையத்தில் பணியாற்ற வேண்டிய இவர் எங்கு இருக்கிறார் என்பது, சம் பந்தப்பட்ட காவல்நிலைய உயர் அதிகாரிகளுக்கே தெரியவில்லை. இதே போல், தமிழ்நாடு முழுதும் உள்ள காவல்நிலையங்க ளில் ஆர்டர்லியாக பணி யாற்றுவோர் மீண்டும் பணிக்கு திரும்பினார்களா என்ற கேள்வி எழுந்துள் ளது.

த.வெ.க.ஆட்சியில் தொடரும் மின் வெட்டு

கும்மிடிப்பூண்டியில் மின்வெட்டால் பொதுமக்கள் அவதி!

விஜய் அரசைக் கண்டித்து பொதுமக்கள் சாலை மறியல்

கும்மிடிப்பூண்டி, அக்.13 -

கும்மிடிப்பூண்டியில் நள்ளிரவில் நிலவிய மின் வெட்டால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். தவெக அரசின் அலட்சியத் தைக் கண்டித்து, சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு நிலவியது.

தவெக ஆட்சிக்கு வந் தது முதல் தமிழ்நாட்டில் மின்வெட்டு பிரச்சினை தலைவிரித்தாடுகிறது. குறிப்பாக இரவில் அமலா கும் மின்வெட்டால் தூக் கத்தை இழந்து மக்கள் தவிக்கின்றனர். இப்படி மக்கள் சொல்லொண்ணா துயரத்தில் தவிக்கும் நிலை யில், அதையெல்லாம் பற்றி கிஞ்சித்தும் கவலைப்படா மல் ரீல்ஸ் போடுவதில் த. வெ.க. அரசு கவனம் செலுத்தி வருகிறது.

இந்த நிலையில் திருவள் ளூர் மாவட்டம் கும்மிடிப் பூண்டியில் நள்ளிரவில் அறிவிக்கப்படாத மின் வெட்டு அமலானது. சுமார் 4 மணி நேரம் நீடித்த மின் வெட்டால் மக்கள் தூக்க மின்றி புழுக்கத்தில் தவித்த னர். ஒரு கட்டத்தில் ஆத்தி ரமடைந்த மக்கள், சென்னை கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையின் புறவழிச் சாலையில் மறி யல் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

Oct 13 2026


நினைவில் வாழும் திராவிடச் சுடர்

முன்னாள் அமைச்சர்,சட்டமன்ற உறுப்பினர்

பரிதிஇளம்வழுதி

முன்னாள் – கழக துணை பொதுச் செயலாளர்

8 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



எங்களின் அன்பே!

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் இந்திரஜித், வீர அபிமன்யுவாய்,

கழகத் தலைவரின் உடன்பிறப்பாய்,

தாங்கள் கழகத்திற்காக பணியாற்றியதை நெஞ்சில் நிறுத்தி

கழகத் தலைவர் மற்றும் இளைஞர் அணி செயலாளர் தலைமையில் தொண்டு செய்வோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்

உதயகுமாரிஇளம்வழுதி B.SC.,

பரிதிஇளம்சுருதி BCA.,M.A.,LLB., Y.R.நந்தினி BHMS.,

கழக அயலக அணி துணைச் செயலாளர்

எழும்பூர் தொகுதி – 99வது வார்டு மாமன்ற உறுப்பினர்

வி.நிரேஷ் B.E.,M.Tech., இ.அனுயாழினி M.A.,(HR)

N.நேதாஜி யாஷ் P.பரிதிவேல்

குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்

இன்று புதிய காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவாகும்!

புதுடெல்லி, அக். 13 –

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதி யில் இன்று புதிய காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவாகும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது.

இது குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறி விப்பின்படி, மலாக்கா ஜலசந்தி மற் றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவி வந்த வளிமண்டல மேலடுக் குச் சுழற்சி தற்போது அந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டிய தென் கிழக்கு வங்கக்கடல் பகுதியை நோக்கி நகர்ந்து வலுவடைந் துள்ளது.

இந்த வளிமண்டல மேலடுக்குச் சுழற்சியின் காரணமாக, இன்று தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் புதிய குறைந்த காற்றழுத்தத் தாழ் வுப் பகுதி உருவாகிறது.

இந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி அடுத்த சில நாட்களில் மேலும் வலுவடைந்து, வடமேற்கு திசையில் நகர்ந்து வட தமிழகம் மற்றும் தெற்கு ஆந்திரக் கடற்கரையை நோக்கி வரக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.

இந்த மேலடுக்குச் சுழற்சி மற்றும் உருவாகவுள்ள தாழ்வுப் பகுதி கார ணமாகக் கடல் சூழலில் சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டு, தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்குவ தற்கான ஆரம்பகட்ட அறிகுறிகள் தென்படுவதாகவும், தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்கள் மற்றும் பல் வேறு பகுதிகளில் வரும் நாட்களில் பரவலாக மழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சி.பி. பவளவண்ணன்

அக்டோபர் 13 (1975)



சென்னை, சைதை பகுதியில் இளம் வயதிலேயே தொண்டராக பணியாற்றி கழக வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர்.

தலைவர் கலைஞர்மீது மாறா அன்பும் பாசமும் கொண்டவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். பேச்சாளராகவும் விளங்கியவர்.

1964ல் சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினராகவும் – 1967ல் சென்னை மாநகர துணை மேயராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.